செ.வெ.எண். 161 நாள்: 07.12.2016

**<u>வேலங்காடு மயானபூமியில் பராமரிப்பு பணி நடைபெற உள்ளதால், வில்லிவாக்கம் மற்றும் ஓட்டேரி எரிவாயு மயான பூமியை பயன்படுத்தி கொள்ளுமாறு பெருநகர சென்னை மாநகராட்சி அறிவிப்பு</u>**

பெருநகர சென்னை மாநகராட்சி, பொதுசுகாதாரத்துறை, மண்டலம்–8, கோட்டம்–101, வேலங்காடு மயானபூமியில் எரிவாயு தகனமேடை புகைப்போக்கி மற்றும் மோட்டார் இயந்திரம் பழுது ஏற்பட்டுள்ளதால், அதனை சீர்செய்யும் பொருட்டு 26.11.2016 முதல் 07.12.2016 வரை தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது. மேலும், 08.12.2016 முதல் 10.12.2016 வரை பராமரிப்பு பணிகள் நடைபெற உள்ளது. ஆகவே, பராமரிப்பு பணி நடைபெறும் நாட்களில், பொதுமக்கள் அருகிலுள்ள வில்லிவாக்கம் மற்றும் ஓட்டேரி எரிவாயு மயான பூமியை பயன்படுத்திக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.

செய்தி வெளியீடு : துணை இயக்குநர் / மக்கள் தொடர்பு அலுவலர்,
பெருநகர சென்னை மாநகராட்சி